

தமிழ்நாடு துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2024) சென்னை, ராயப்பேட்டை பைகிராப்ட்ஸ் ரோடு முதல் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேப்பாக்கம் இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் கட்டப்படவுள்ள இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் தி.அ.சிவஞானம், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்). நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், மாமன்ற உறுப்பினர் சிவ.ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2024) சென்னை திருவல்லிக்கேணி, பாரதி சாலையில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள நூலகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், இணை இயக்குநர் (பொது நூலகம்) இளங்கோ சந்திரகுமார், மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

# கிறிஸ்துமஸ் பெருவிழா: முதல்வர் 2,500 பேருக்கு பரிசுப் பொருட்கள் வழங்குகிறார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றியுரை! தயாநிதி மாறன் எம்.பி. – மேயர் ஆர்.பிரியா ராஜன் முன்னிலை!

**சென்னை, டிச.22-**

**சென்னை கிழக்கு மாவட்டம், தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.**

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில், கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு நாளை (23.12.2024 திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில் சென்னை, பெரம்பூர், தொன் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறும் அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமை ஏற்று 2,500 கிறிஸ்துவ மக்களுக்கு புத்தாடை மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இச்சிறப்புமிக்க கிறிஸ்துமஸ் விழாவில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., சென்னை மாநகராட்சி மேயர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருமதி.பிரியாராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

செயலாளர், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சுபேர்கான், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் அருட்தந்தை ஜோ.அருண், தரங்கை பேராயர்/தலைவர், தமிழ் கவிசேஷ லூத்தரன் திருச்சபைடாக்டர் ஏ.கிறிஸ்டியன் சாம்ராஜ், இ.சி.ஐ. சென்னை பேராயர், இந்திய கவிசேஷ திருச்சபை உயர் மறை திருமதி.டாக்டர். கதிரொளி மாணிக்கம், மேனாள் நீதிபதி சென்னை உயர்நீதிமன்றம் - நீதியரசன் அக்பர் அலி, உறுப்பினர், தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் - திருத்தந்தை ஏ.சுவர்ணராஜ், தலைவர், கிருஸ்துவ நல்லெண்ண இயக்கம் – முனைவர் த.இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., பேராயர் சி.எஸ்.ஐ.வேலூர், பொறுப்பு பேராயர் சி. எஸ்.ஐ. சென்னை பேராயம் எச்.சர்மா நித்தியானந்தம், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர், திருக்கைலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள் – சாந்தலிங்க மருதாசல அடிகளார், ரெக்டார் (ம) தாளாளர் பெரம்பூர் டான்பாஸ்கோ பள்ளி - அருட்தந்தை மரிய ஆரோக்கியம் கனகா, உறுப்பினர் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் – பிரவின்குமார் டாடியா சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் பெரம்பூர், டான் போஸ்கோ மேல்நிலைப்பள்ளி பாடல் குழுவினர் பாடல் இசைக்கின்றனர். மற்றும் தலைமை ஆசிரியர் இ.எல். எம்.பெப்ரிசியஸ் மேல்நிலைப்பள்ளி கவிஞர் ஜோ.அருள் பிரகாஷ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றார்.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றியுரை ஆற்றுகிறார்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், ஐ.சி.எப்.வ .முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதாமகேஷ்குமார் தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி.பழனி, இள. இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல்.டி. தாமஸ். கொளத்தூர் மேற்கு (ம) கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜே.சி.பாபு, ப. அதிபதி, எஸ்.முருகன், எம்.டி.தமிழ்செல்வன், பா.அன்பரசு, டி.சந்திரசேகர், ந.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.ரவி, பி.ஊமைதுரை, கே.பி.ஆதவன்மணி.

மாமன்ற உறுப்பினர்கள்; கே.சாரதா, எம். தாவூத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, பி.அமுதா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.12.2024) சென்னை, திருவல்லிக்கேணி, ஜானி பாட்ஷா தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள நூலகத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், , நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், மாமன்ற உறுப்பினர் சிவ.ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆலந்தூர் தொகுதி கண்டோன்மெண்ட்டில் இன்று மாலை நடைபெறும் கிறிஸ்துமஸ் விழாவை தொடங்கி வைத்து

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், டிச.22-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் ஆலந்தூர் தொகுதி கண்டோன்மெண்ட்டில் இன்று மாலை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெறும் சமத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழாவை தொடங்கி வைத்து 1,000 கிறிஸ்துவ பெரு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார். இவ்விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து பங்கேற்கும் படி மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் கண்டோன்மெண்ட் நகரத்தில் உள்ள புனித மான் போர்ட் மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் சமத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா இன்று டிசம்பர் 22-ஆம் தேதி மாலை 5 மணியளவில் நடைபெறுகிறது.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் இவ்விழாவிற்கு தலைமை வகிக்கிறார். மாவட்ட அமைப்பாளர் செ.ஆல்பர்ட் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.*

*மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு தலைவர் எல்.டி.ஜார்ஜ், மாவட்ட துணைத் தலைவர் என். ஷாஜகான், மாவட்ட*



*துணை அமைப்பாளர்கள் ஆ.தீபக் சாமுவேல், ஜி.ஏ. ராயப்பா, டி.ஆரோக்கிய ராஜ், ஐ.அலிசபர், பி.ஜாபர் அலி, க.அல்தாபி உசேன், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி.குணாளன், கண்டோன்மெண்ட் நகர செயலாளர் டி. பாபு, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இச்சமத்துவ கிறிஸ்துமஸ் பெரு விழாவை கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, 1,000 கிறிஸ்துவ பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.*

*இவ்விழாவில் கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி. ஆர். பாலு மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.*

*தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் சொ. ஜோ அருண், சென்னை மயிலை உயர் மறை மாவட்ட முன்னாள் பேராயர் ஏ.எம். சின்னப்பா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம் மாநகர செயலர் எஸ்.ஆர் ராஜா, மாவட்ட கழக துணை செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், திருப்போரூர் சட்ட மன்ற உறுப்பின் எஸ். எஸ் பாலாஜி, கழக சிறுபான்மை அணி செயலாளர் அ. சுபேர்கான் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.*

*நம்முடைய இளைய தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் இக் கிறிஸ்துமஸ் பெரு விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று கிறிஸ்துமஸ் பெருவிழாவை சிறப்பிக்கும் படி அன்புடன் கேட்டு கொள்கிறேன்.*

**மாவட்ட தி.மு.க சார்பில் பிரம்மாண்ட வரவேற்பு!**

*இக் கிறிஸ்துமஸ் விழாவிற்கு வருகைத் தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் புனித மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் முன்பு எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையில் இன்று மாலை 04.30 மணியளவில் மேள- தாளம், பேண்டு வாத்தியம்- முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட நிர்வாகிகள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக இளைஞர் அணி, மாணவர் அணி - மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் அணி திரண்டு வந்து, தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக் கொடியையும் - வரவேற்பு பதாகைகளையும் ஏந்தி நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.*



சென்னை, ஆர்.கே.நகர், தங்கம் மகாலில் 4 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் விழா சட்ட மன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபிநேசர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி இணைச் செயலாளர் எஸ்.ஜோயல், தேவாலய பாதிரியார்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உதயநாள் விழாவை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 139 வது வார்டில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., முன்னிலையில் 1000 முதியவர்களுக்கு நல உதவிகளை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழங்கினார். 139வது வார்டு மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி, பகுதி அவைத்தலைவர் களக்காடிஎல்லப்பன், வட்டசெயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், மாவட்டஅமைப்பாளர்கள் சைதை சாதிக், எம்.எஸ்.ஹரிபாபு உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.